**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 65/2018 Date:15.07.2025**

**(P.W.1)- Suresh**

**<u>9 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** நான் இந்த வழக்கை ஊருக்காக வாதி என்ற முறையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் வழக்கு பட்டிகை சொத்தை 2017 ம் ஆண்டு கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் பழைய கட்டிடம் இருந்தது என்றாலும் அதை 1 முதல் 3 பிரதிவாதிகள் இடித்து விட்டார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகள் புதிதாக கட்டிடம் கட்டி வருகிறார்கள் என்றால் சரிதான்.

**2.**மேற்படி கட்டிடம் மத வழிபாட்டிற்காக கட்டப்படுகிறது என்றாலும் மேற்படி கட்டிடத்திற்கு அனுமதி எதுவும் பெறவில்லையென்றாலும் சரிதான்.மேற்படி கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக குளச்சல் காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் அளித்துள்ளேன். மேற்படி புகார் மனு என்ன ஆனது என்றால் கோட்டாட்சியரிடம் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. கோட்டாட்சியர் விசாரித்தாரா என்றால் விசாரித்தார், மேற்படி விசாரணையில் கட்டிடம் கட்டக்கூடாது என்று உத்தரவிடப்பட்டது. சுற்றியுள்ள பகுதிகளில் அனைத்து மதத்தினரும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

**3.**ஒரு வழிப்பாட்டு தலத்திற்கும் இன்னொரு வழிபாட்டு தலத்திற்கும் ஒரு கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும் என்றால் சரிதான். எனவே முறையான அனுமதி இல்லாமல் கட்டக்கூடிய கட்டிடம் கட்டுவதற்கு தடை செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்